# செப்டம்பர் மாத கருத்தமைதி

## ஒருங்கிணைதலும் குழுமவாழ்வும்

**“அப்பம் ஒன்றே ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் உள்ளோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்கு பெறுகிறோம்.”**

**(1கொரி 10: 17)**

மூவொரு இறைவனின் உறவையும், தொடக்ககால அப்போஸ்தலர்களின் வாழ்வையும், வியப்பூட்டும் விண்ணக வாழ்வையும், மண்ணுலகில் வாழும்போதே அனுபவிக்க சிறப்பு அழைப்புப்பெற்ற அடைக்கல அன்னையின் அன்பு புதல்விகளே, உங்கள் அனைவரையும் கருத்தமைதியில் பங்குகொள்ள அன்போடு அழைக்கிறோம்.

**மாட மாளிகைகளில் நிம்மதியில்லை**
**கூட கோபுரங்களில் குதூகலமில்லை**
**அழகு மணிமண்டபத்தில் அன்பு வாழ்க்கையில்லை**
**ஆடம்பர சொத்துகளில் ஆனந்தமில்லை**

என்று ஒவ்வொரு மனிதனும் நிம்மதியைத் தேடி, அலைகின்ற பல திசைகளிலிருந்தும், இறைவனின் சீடத்திகளாக வாழ ஒவ்வொருக்கும் அழைப்பை கொடுத்து, குழும வாழ்வில் ஒன்றிணைந்து வாழ வைத்துக் கொண்டிருக்கும் நம் இறைவனின் அளப்பறிய பேரன்பிற்கு நாம் நன்றி கூறும் நேரம். ஆம் அன்பு உள்ளங்களே, விழுதுகள் மரங்களை பாதுகாப்பதுபோல் நாம் அனைவரும் நம் அடைக்கல அன்னை சபையில் விழுதுகளாக இயங்கி திருஅவை என்னும் மரத்தை தாங்கிபிடித்து வாழ அழைத்த இறைவனுக்கு நன்றி கூறும் வண்ணமாகவும் ஒரே நோக்கத்தோடு குழுமமாக வாழ்ந்து வருவதை நினைவூட்டும் வகையிலும் பல திசையிலிருந்தும் ஒளியை ஏந்தி ஆண்டவரின் பாதத்தில் அர்ப்பணிப்போம்.

**பாடல் : நீயே எமது ஒளி . . .**
**பாடல் : ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன் . . .**

தாகமாய் வருபவன் தண்ணீரைச் சுவைத்து அருந்தும்போது நீரூற்றுகள் அவன் ஞாபகத்திற்கு வரும். மாலை காற்று மூக்கிற்கு விருந்தளிக்கும்போது மல்லிகை மலரல்லவோ நம் மனக்கண்முன் தோன்றும். அதுபோன்று துறவற வாழ்வை போற்றும் நற்செயல்கள் அனைத்திற்கும் நம் குழுமம் அல்லவா பிறப்பிடங்கள். ஆயிரம் மூட்டை உப்பினுள்ளும் அரைசால் சர்க்கரையையே எறும்பு தேடிச்செல்லும். ஆயிரம் காகிதப் பூக்கள் கண்ணைக் கவர்ந்தாலும் அங்கே மறைந்திருக்கும் தேன்சொட்டும் வண்ண மலரே வண்டை ஈர்க்கும். மனித வாழ்க்கை பகடைக்காயாய் மாறிக் கொண்டிருக்கும்போது அங்கே பண்பு, பாசம், பக்தி, ஒழுங்கு நிறைந்தோங்கி பகலவனாய் பிரகாசிக்கும் குழுமத்தையே நம் நெஞ்சங்கள் தேடும். இத்தகைய அன்பு, பாசம் நிறைந்த நிறைவான குழுமமாக நம் சபையில் உள்ள அனைத்து குழுமத்தை இறைவன் ஆசீர்வதித்து கொண்டிருப்பதற்காக நன்றி கூறுவோம்.

**நன்றியுரைத்தல் :**

**பதில் : நன்றி இயேசுவே**

- எங்கள் மீது மாறாத பேரன்பு கொண்டதற்காக – நன்றி இயேசுவே
- உமது பேரன்பாலும் இரக்கத்தாலும் எங்களுக்கு மணிமுடி சூட்டியதற்காக . . .
- எங்கள் மீது தயவும் இரக்கமும் கொண்டதற்காக . . .
- எங்களது தீய செயல்களை நினைவு கூறாமல் எங்களை பேறுபெற்றவளாக ஆசீர்வதித்தற்காக . . .
- உமது அருட்கரம் எங்களோடு இருப்பதற்காக . . .
- உமது உள்ளங்கையில் எங்களை பொறித்து வைத்திருப்பதற்காக . . .
- உமது வலக்கரத்தால் என்னைத் தாங்கி இடக்கரத்தால் எங்களை அணைத்துக் கொண்டதற்காக. . .

**பாடல் : நன்றி பாடி நன்றி பாடி நாதனை . . .**

**இறைவார்த்தை : உரோ 12: 9 - 14**

பல வண்ணங்களில், பல எண்ணங்களில், பல வடிவங்களில் கதம்பமாக பூத்துக் குலுங்கி மணம் பரப்பும் மலர் தோட்டம்தான் குடும்பம். ஓரே வீட்டில் வசித்து, ஒரே அடுப்பில் சமைத்து பகிர்ந்துண்டு வாழ்கிற உறவினர் கூட்டத்திற்கு பெயர்தான் குடும்பம். குடும்பம் என்பது மனிதனை உருவாக்கும் பல்கலைக் கழகம். உறவைக் கற்றுக்கொடுத்து உறவால் வாழ்வு தரும் தொட்டில்.

இல்லம் என்னும் கூட்டுக்குள் அன்பென்னும் சத்தத்தை கீச்சிடும் பாசப் பறவைகள் தங்குமிடம். கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம்.

**அன்பின் பிறப்பிடம்...**

**மகிழ்ச்சியின் இருப்பிடம்..**

**பாசத்தின் வளர்ப்பிடம்...**

**பக்குவத்தின் காப்பிடம்...**

ஆம், கொஞ்சிக் குலாவி மகிழ்வதற்கும் நாங்கள் தனிமையில் இல்லை, எங்களுக்கும் வலிமை அளிக்கும் படை இருக்கிறது என்பதை வெளியுலகிற்கு வெளிப்படுத்துவது குழும உறவுகள். இது கடவுளையும் மனிதரையும் ஓரிடத்தில் உறைய வைக்கும் ஆலயம். கடவுளுக்குரிய மக்களாய் வாழ அழைக்கும் குட்டித் திருஅவை. பல்வேறு துன்பமும் மகிழ்ச்சியும் கலந்தது. சுமைகளும் சுகங்களும் நிரம்பியது. சவால்களையும், சோதனைகளையும் கடந்து சாதனை படைக்க வைப்பது. நாம் உறுதியோடும் மகிழ்வோடும் வாழ்வதற்கு இறைவனால் தரப்பட்ட இனிய இல்லிடம்தான் குழுமம்.

தந்தை கடவுள் ஆதாம் ஏவாள் வழியாக முதல் குடும்பத்தை உருவாக்கி ஆசீர்வதித்தார். மரியாள் சூசை இயேசுவின் வழியாக மீட்பின் திருக்குடும்பத்தை அகிலத்திற்கு அன்பு பரிசாக அர்ப்பணித்தார். பல்வேறு குடும்பத்தில் பிறந்த பன்னிரு சீடர்களை கொண்டு புதிய குடும்பமாக நல்குழுமமாக உருவாக்கி நமக்குக் கொடுத்தவர் இயேசு. பிறர்மீது நம்பிக்கை கொள்ளவும், பிறருக்கு நம்பிக்கை கொடுக்கும் நல்லிடமாக வாழ கற்றுக் கொடுத்தவர். அவரின் பாதசுவட்டைப் பின்பற்றிய தொடக்கக்கால கிறிஸ்தவர்களை போன்று நம்முடன் வாழ கொடுக்கப்பட்டுள்ள நமது குழுமச் சகோதரிகளுக்காக நன்றிக்கரம் குவிப்போம். குறை நிறைகளோடு ஏற்றுக்கொண்டு ஏற்ற இறக்கங்களில் தோள்கொடுத்து, சுமைகளையும் சுகங்களாக மாற்றும், கஷ்டங்களையும் இஷ்டங்களாக மாற்றும் அருளை நாம் ஒவ்வொருவரும் பெற்று குதுகலமான குழுமங்களை கட்டி எழுப்பிடவும், நம் சபைச் சகோதரிகள் அனைவரும் நல்ல உடல் உள்ள சுகத்தோடு பணியை தொடரவும் இணைவோம் இப்பாடலில் . . .

**பாடல் : எத்துணை நன்று எத்துணை நன்று . . .**

இன்பமான குழுமம் எப்படி இருக்கும்? அன்பு மனம் அனைவரையும் சூழ்ந்திருக்கும். உண்பது, ஒன்றாக கூடி உறங்குவது, ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளல், விட்டுக்கொடுத்தல், ஒவ்வொருவரின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்தல். இதற்கெல்லாம் அடிப்படையாக இருப்பது அன்பே. இறைவா, உம் திருமுன் ஒரே குடும்பமாய் உமது பணியை செய்துவரும் எங்களில் நீர் இருந்து வழிநடத்துவது எத்துணை இனிமையானது. ஆம் அன்பு உள்ளங்களே, விட்டுக்கொடுப்போம், உதவுவோம் என்றிருந்தால் எட்டிப்பறிக்கலாம் இன்பக்கனியை. அப்படிப்பட்ட நல்ல குழுமத்திற்கு ஆண்டவர் அளிக்கும் கொடைகள் ஆயிரம். ஒவ்வொரு நாளும் ஆயிரமாயிரம் கொடைகளைப் பொழியும் இறைவனின் இரக்கத்தை எண்ணிப் பார்ப்போம்.

**அன்பே நம் குழுமத்தின் ஆணிவேர்**
**அது சுமையைக் குறைக்கும் மந்திரம்**
**மனித உள்ளங்களைப் பிணைக்கும் சங்கிலி**
**மானுடத்தை அடையும் பாலம்**
**கஷ்ட நஷ்டங்களின் ஆறுதல்**
**துறவறத்தின் இலக்கணம்**
**இயேசு பணித்த கட்டளை**

என்று மனதில் ஏற்று, செபமே நம் குழுமத்தின் தண்டு என்பதை நம் வாழ்வில் உணர்ந்து வரும் நாம், பிரமாணிக்கமே நம் குழுமத்தின் கிளை என்பதை நமது துறவு வாழ்வின் வார்த்தைப்பாட்டினால் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம், அருஞ்செயல்களே அதன் பூக்கள் என்று கூறுவதற்கேற்ப பரிவு, அக்கறை, இரக்கம், மன்னிக்கும் மனப்பான்மை, நல்லிணக்கம், விருந்தோம்பல், அனாதைகளுக்கு அடைக்கலம், உதவும் மனம், தளர்ந்த உள்ளங்களை தட்டிக்கொடுத்தல் போன்ற அழகு தரும் அருஞ்செயல்கள் நிறைந்த பூக்களை இந்த பிரபஞ்சத்தில் மணம்பெற செய்வோம் அருள்வேண்டி இணைவோம் இப்பாடலில்.

**பாடல் : இறைகுடும்பமாய் நாங்கள் வாழவே . . .**

**உறவுகள் முக்கியம் வளமுடன் வாழ!**
**குணங்கள் முக்கியம் குழுமமாய் வாழ!**
**வரவுகள் முக்கியம் வளமுடன் வாழ!**
**உயர்வுகள் முக்கியம் உதாரணமாய் வாழ!**
**கனவுகள் முக்கியம் தினம் தினம் வாழ!**
**அன்பு முக்கியம் அமைதியாய் வாழ!**

ஆம் உறவோடும், உணர்வோடும், வரவோடும், வளமோடும், கனவோடும், குணத்தோடும், கடவுள் துணையோடும் நாம் தினம்தினம் வாழ செல்லும் இடந்தோரும், செய்யும் பணிதோரும், வாழும் வழிதோரும், வளரும் நிலைதோரும் கூட இருந்து, உடன் இருந்து நாம் அனைவரும் சரிந்துவிடாது, தளர்ந்துவிடாது, களங்கிவிடாது, கண்ணீர்விடாது, நிதம் நிதம் நமக்கு தோள்கொடுத்து உதவுவது தான் நமது அன்பு நிறைந்த குழுமம். குழுமம் என்ற கடலில் சிலசமயம் தந்தளித்தபோது அன்பு என்ற கலங்கரை விளக்கமே நம்மை கரைசேர்த்தது.

**தொழில்நுட்ப உலகில் அன்பின் சிறப்பு பற்றிய கருத்து :**

நான் வாட்ஸ் ஆப், வைபர் என பல குரல்களில் வாய்ஸ் மெசஸ் அனுப்பினாலும் டப்மாஷ் செய்து எல்லாரையும் கலாய்த்தாலும் அன்பு எனக்கு இல்லையேல், நான் சத்தமிடும் சைனா.ஃபோன் போலாவேன். ஃபேஸ்புக்கில் நீண்ட ஸ்டேட்டஸ் போடும் ஆற்றல் எனக்கு இருந்தாலும், எல்லா ஷார்ட்கட்கீயும் தெரிந்திருந்தாலும், பாஸ்வேர்ட்களை ஹேக் செய்யும் ஆற்றல் பெற்றிருப்பினும் என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை. என் எல்லா அக்கவுண்ட்களையும் அழித்துவிட்டு என் 3ஜி இணைப்பை டிஆக்டிவேட் செய்து, என் ஐ.ஃபோனையும் தானமாக கொடுத்துவிட்டு இனிமேல் சிம்ப்பிள் லை.ஃப் என வெறும் ஆயிரம் ரூபாய்க்கு சாம்சங் குரு மொபைல் வாங்கினாலும அன்பு எனக்கு இல்லையேல் எனக்கு பயன் ஒன்றுமில்லை. அன்பு ஃபரண்ட் ரிக்வஸ்ட் கொடுக்கும், கமெண்ட் போடும்,

லைக் கொடுக்கும். பச்சை லைட் கண்டவுடன் பயந்து ஓடாது. இரண்டு டிக் விழுந்து பதில் வரவில்லையென்றாலும் பொறுமையோடு இருக்கும். அடுத்தவரின் நம்பர் என்கேஜாக

இருந்தாலும் சந்தேகப்படாது. அனைத்தையும் நம்பும். அவர் திரும்பி அழைப்பார் என காத்திருக்கும். கோபப்படாது. நாம் இப்போது 4ஜி இணைப்பில் வரி வரியாய்க் காண்கிறோம். ஆனால் 5ஜி வந்தவுடன் முழுமையாய்க் காண்போம். பிக்அப்பு, டிராப்பு, அன்பு - இந்த மூன்றில் அன்பே சிறந்தது. தொழில்நுட்பம் எல்லாம் மறைந்தாலும் அழிந்தாலும் இறுதியாக வெல்வது அன்பு. இத்தகைய அன்பை ஆணிவேராக கொண்ட ஒருங்கிணைந்த குழுமமாக வாழ்கின்றோமா? சிந்தித்து பார்ப்போம்.

**பாடல் : அன்பு என்பது வல்லமை . .**

பிரபஞ்ச பேரன்பை வாழ்வாக்கி கொண்டிருக்கும் நாம் நம் குழுமத்தோடு ஒன்றிணைந்து வாழ்கின்றோமா? என்று ஆய்வு செய்து பார்ப்போம்.

**நம்மை சுயஆய்வு செய்து பார்ப்போம் :**

விட்டுக்கொடுத்து, அனுசரித்து, கஷ்டம் என்றால் கை கொடுத்து, துன்பமென்றால் தோள்கொடுத்து, சந்தோஷத்தில் கலகலத்து, அன்பென்னும் சங்கிலியில் உறவுகளை பிணைப்பது குழுமம். குழுமம் என்ற அழகிய கூட்டை தனது சுயநலத்தால் சின்ன சின்ன தீவுகளாய் சிதைந்து போகச் செய்வது வேதனைக்குரியது என்பதை உணரும் நாம், உள்ளம் உருகி உறவின் தேவனிடம் மன்னிப்பை நாடுவோம்.

**1. நீயா நானா? - நீயும் நானும்....**

நீயா நானா என்பதல்ல! நீயும் நானும் என்பதே குழும வாழ்க்கை என்பதை அகம் உணர்ந்து முரண்பாடுகளைக் கடந்து, புனிதமான உறவை புரிந்துகொண்டு, அன்பாய் வாழ ஆசைகொண்ட போதும், பல நேரங்களில் அறிவின் ஆதிக்கம் முந்திக்கொண்டு சத்தான உறவிற்கு முட்டுக்கட்டையாக இருந்துள்ளது என்பதை உணர்ந்து உளம் வருந்துகிறோம். உன்னன்பை இறைஞ்சுகிறோம்.

**2. பணமும் புகழும் - நட்பும் உறவும்...**

பணமும் புகழும் மரத்தின் கனிகள் என்றால் நட்பும் உறவும் அம்மரத்தின் வேர்கள்! கனிகள் இன்றி மரம் வாழ இயலும்! வேர்கள் இன்றி மரம் வாழ இயலாது என்பது அனைவரும் அறிந்த உண்மை. குழுமத்தின் ஆணிவேர் உறவு என்பதை நாங்கள் மறந்து பல சமங்களில் பணம், புகழ், பதவி, பட்டம் போன்ற உலகின் கனிகளை சுவைத்து உறவின் கனிகளாகிய அன்பு, நட்பு, மன்னிப்பு இவைகளை உதறித் தள்ளிய தருணங்களுக்காக மனம் வருந்துகிறோம். மன்னிப்பை நாடுகிறோம்.

3. அறிவா? – அனுபவமா?...

***உங்கள் குழுமத்தில் புதிய கதவுகளைத் திறப்பதற்கான சாவி மூத்தவர்களிடமே இருக்கிறது என்கிறார் நம் திருத்தந்தை பிரான்சிஸ்.***

அறிவைக் கடந்து, அனுபவமே வாழ்க்கைக்கு சுவையூட்டுகிறது என்பதை தங்கள் வாழ்வால் உணர்த்திக்கொண்டு இருப்பவர்கள் எம் மூத்தோர்கள். இவர்களை படித்து, பிடித்து, பக்குவப்படுத்தி, பத்திரப்படுத்தி பாதுக்காக்க வேண்டிய நாங்கள் பல தருணங்களில் அறிவு சார்ந்த தரவுகளை தகவல் தொடர்பு சாதனங்களின் வழியாக பெருக்கிக்கொள்ள ஆர்வம் காட்டிவிட்டு, அனுபவப்பாடங்களை ஏற்க மறுத்த நேரங்களுக்காக உள்ளம் வருந்துகிறோம். உன்னருளை வேண்டுகிறோம்.

**பாடல் : இறைவா எனக்கு நீதான் வேண்டும்**

**இறுதி செபம் :**

தந்தை, மைந்தன், தூய ஆவியாகிய இறைவா, உம்மைப் போல நாங்கள் இந்த பிரபஞ்ச சக்திகளோடு, குழுமத்தில் ஒன்றிணைந்து, நீர் கற்பித்த விழுமியங்களை வாழ்வாக்கவும், தனி ஒருவனால் அடையக் கூடிய இன்பத்தை விட பலருடைய முயற்சியால் அடையக்கூடிய இன்பம் அதிகம் என்று உணர்ந்து, நமது குழும வாழ்வும் அதன் ஒன்றிப்பும் அன்பில் ஒன்றிணைந்து செயல்படும்போது நம் உறவும், உயிர்ப்புக் கொள்கிறது என்பதை எங்கள் வாழ்வில் ஏற்று வாழ வரம் தர வேண்டுமென எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம் - ஆமென்.